17.04.2026

MC.1/2022

**PW–1. திருவளர்செல்வி க/பெ.பார்த்தசாரதி**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

இந்த வழக்கு யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ரெங்கராஜுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 7 பேர் என்றால் சரிதான். ஒரே தெருவில் தான் என் உடன்பிறந்தவர்கள் அனைவரும் உள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எதிர்மனுதாரராகிய எனது தம்பி அவரது முதல் திருமணத்திற்கு பிறகு ஒரே வீட்டில் தான் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்தோம் என்றால் சரிதான். நானும் எனது உடன்பிறந்த சகோதரர்கள் சார்பாக மாதம் மாதம் ரூ.25,000/– தந்துவிடுவதாக ஒரு ஒப்பந்தம் போட்டுக் கொண்டோம் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு 2 வது திருமணம் நடைபெறுவதற்கு 2 நாட்களுக்கு முன்பாக தற்போது நான் வசித்து வரும் வீடும், 50 செண்ட் இடமும் மைனர் திருவேங்கடம் பெயருக்கு எழுதிக் கொடுத்தாரா என்றால் எழுதிக் கொடுத்தார். எனது அண்ணன் வெங்கட்ராஜ் என்பவர் மூலமாக கார்டியன் நிலைமையில் எழுதிக் கொடுத்தார். அந்த வீட்டில் தான் நான் தற்போது குடியிருந்து வருகிறேன் என்றால் எனது பேரனுடன் குடியிருந்து வருகிறேன். எதிர்மனுதாரர் எனக்கும் எனது பேரனை பார்ப்பதற்காக எனது பெயரிலோ எனது பேரன் பெயரிலோ வங்கி கணக்கில் பணம் போட்டாரா என்றால் 2வது திருமணத்திற்கு முன்பு வரை பணம் போட்டார். எதிர்மனுதாரர் தனது மகன் திருவேங்கடத்திற்கு பாதுகாவலர் வெங்கட்ராஜ் மூலமாக கொடுக்கப்பட்ட செட்டில்மண்ட் பத்திரத்தில் வருங்கால தேவைகளை பூர்த்தி செய்வதற்காக எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த பத்திரத்தில் எனது அண்ணனை பாதுகாவலராக போட்டிருப்பதால் எந்த பலனும் எனது பேரனுக்கு இல்லை. எதிர்மனுதாரர் எழுதிக் கொடுத்த வீட்டில்

தான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது பேரனுடன் குடியிருக்கிறேன்.

அதுபோல் மைனர் திருவேங்கடத்திற்கு பராமரிப்பு தொகையாக ரூ. 5 லட்சம் ரொக்கமாக மேற்படி மைனர் சார்பாக எனக்கு எதிர்மனுதாரர் கொடுத்தாரா என்றால் இல்லை. 2வது திருமணம் செய்வதற்கு முன்பாக தனத மகனுக்கு வருங்கால பராமரிப்புக்காக எதிர்மனுதாரர் எதாவது செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் தனது சொத்தினை முழுவதுமாக எழுதி வைத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. பாதி சொத்து தான் எழுதிக் கொடுத்துள்ளார். எதிர்மனுதாரருக்கு பூர்வீக சொத்து மூலமாக ரூ.50 ஆயிரம் வருகிறதா என்றால் சொத்து எழுதி வைத்துவிட்டார். எதிர்மனுதாரர் மாதம் ரூ.80 ஆயிரம் வருவதற்கு எந்த விதமான ஆவணமும் இல்லை என்றால் வருகிறது. எதிர்மனுதாரருக்கு 2ம் திருமணமாகி 1 குழந்தையும் முதல் திருமணமாகி 1 குழந்தையும் ஆக மொத்தம் 2 குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். தற்போது எதிர்மனுதாரருக்கு எவ்வித வேலையும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் ஏற்கனவே தனது முதல் மனைவியின் குழந்தைக்கு நிரந்தர ஜீவனாம்சமாக அவரது சொத்துக்களையும் பணமும் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை